

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர், தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமீபத்தில் பதவி உயர்வு பெற்ற 190 துணை மாநில வரி அலுவலர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாமை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ்., வணிகவரி ஆணையர் எஸ்.நாகராஜன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தி.சினேகா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியக அலுவலர்கள் மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு இராட்டினகிணறு மேம்பாலத்தின் அருகே நேற்று (18.08.2025) ஏற்பட்ட விபத்தில் காயமடைந்தவர்கள் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சென்று நலம் விசாரித்து, ஆறுதல் கூறினார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு சார் ஆட்சியர் மாலதி ஹெலன், மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பிரியா பசுபதி, மற்றும் மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வேலூர் தொகுதியில் உள்ள இரயில் நிலையங்களில்

# 5 முக்கிய ரயில்கள் நின்று செல்ல ஒப்புதல்!

## டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. தகவல்!

வேலூர், ஆக. 19 -

வேலூருக்கு உட்பட்ட பகுதிகளில் 5 இரயில்களை நிறுத்திச் செல்ல தென்னக ரயில்வே ஒப்புதல் அளித்துள்ளது என்று வேலூர் தொகுதி எம்.பி. டி.எம்.கதிர் ஆனந்த் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:

நமது வேலூர் தொகுதிக் குட்பட்ட மக்களிடம் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் தென்னக இரயில்வே கூட்டங்கள் மற்றும் மக்களவையில் நான் கொடுத்த தொடர் அழுத்தத்தால் ஐந்து இரயில்கள் வேலூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நிறுத்திச் செல்ல ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



கீழ்க்காணும் அட்டவணைக்கு உட்பட்ட இரயில்கள் மற்றும் அதுசார்ந்த நிறுத்தம் பற்றிய விவரங்களை மக்கள் பார்வைக்கு பகிர்ந்துள்ளேன்.

இரயில் பெயர் புதிய நிறுத்தம் விவரம் வருமாறு:

12691 மற்றும் 12692 சென்ட்ரல் முதல் ஷிமோகா செல்லும் இரண்டு அதிவேக இரயில்கள் - ஆம்பூர்

13351 தன்பாத் முதல் ஆலப்புழா செல்லும் எக்ஸ்பிரஸ் இரயில் - குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி

16087 மற்றும் 16088 அரக்கோணம் முதல் சேலம் செல்லும் இரண்டு எக்ஸ்பிரஸ் இரயில்கள் - வளத்தூர்

16087 அரக்கோணம் முதல் சேலம் செல்லும் எக்ஸ்பிரஸ் இரயில் - மேல்பட்டி இந்த அறிவிப்பால், வேலூர் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட ஆம்பூர், வாணியம்பாடி உள்ளிட்ட வணிக பெருநகரங்களில் இருந்தும் பல்வேறு பகுதிகளில் இருந்து பணிக்கு செல்லும் தொழிலாளர்கள், விவசாயப் பெருமக்கள், பெண்கள், மூத்த குடிமக்கள் மற்றும் தொழில் முனைவோர் உள்ளிட்டவர்கள் முக்கிய நகரங்களுக்கு பயணிப்பதற்கு, மறைமுக பொருளாதார வளர்ச்சிக்கும் இது வித்திடும் என்றால் அது மிகையாகாது. இது உங்களின் குரலுக்கு கிடைத்த அங்கீகாரம். எனவே எனது மதிப்பிற்குரிய வேலூர் தொகுதி மக்களாகிய நீங்கள், தொடர்ந்து உங்களது தேவைகள் மற்றும் கோரிக்கைகளை முன் வையுங்கள். உங்களின் குரலாக தொடர்ந்து எதிரொலிப்பேன். வேலூரின் வளர்ச்சிக்கு ஒருசேர உழைப்போம்!

இவ்வாறு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### ஆவடி தொகுதியில் ரூபாய் 2 கோடியே 50 லட்சம் மதிப்பிலான

# பல்வேறு திட்டப் பணிகளுக்கு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டி திறந்து வைத்தார்!

திருவள்ளூர் ஆக 19;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை மற்றும் அதிமுக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டிருந்த திட்டப் பணிகளை, மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வண்ணமாக தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் பல்வேறு கட்டிடப் பணிகளை திறந்து வைத்து பல்வேறு திட்ட பணிகளை தொடங்கி வைத்தார்

ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிதியிலிருந்து 2 கோடி 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆவடி 40 வது வார்டில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் சித்தரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டினார்

41 ,31, 30 ஆகிய வார்டுகளில் புதிய சிந்தாமணி மற்றும் கூட்டுறவு நியாய விலை கடைகளை கட்டத்திற்கான அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்

26, 27 ஆகிய வார்டுகளில் புதிய கூட்டுறவு நியாய விலைக் கடையை பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்

47 வது வார்டு பஜனை கோயில் தெருவில் பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை அகற்றி புதிய அங்கன்வாடி அமைக்க பணிகளை தொடங்கி வைத்தார். 32 வது வார்டு அண்ணனூர் ரயில் நிலையம் அருகில் பேருந்து நிறுத்தம் மற்றும் நிழற்குடை அமைத்தல் பணிகள்

சோழப்பேடு நடுநிலை பள்ளியில் புதிதாக 2 வகுப்பறை மற்றும் அறிவியல் ஆய்வக கட்டிடம் , திருமுல்லைவாயில் எட்டியம்மன் நகர் மேல்நிலைப் பள்ளியில் 2 வகுப்பறை கட்டிடம் மற்றும் SM நகர் ஆரம்பப் பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டிடம் என 6 புதிய வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்து ,1 அறிவியல் ஆய்வக கட்டிடத்தையும் திறந்து வைத்தார்.

இதில் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா மாநகரச் செயலாளர் சண் பிரகாஷ் மண்டல குழு தலைவர்கள் ஜி. ராஜேந்திரன் பேபிசேகர், பகுதி செயலாளர்கள் ஜி. நாராயண பிரசாத், பேபி சேகர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் சத்திய ரவி, சாந்தி பாண்டியன், அழகு விஜயா, ஞா.வெங்கடேசன், ஆர்.சுதாகர், வெங்கடேசன், எஸ்.செல்வம், கோபால், எஸ்.விஜயன், வி.மனோகரன், வின்செண்ட், மாலா பிரகாஷ், பிரபு வேல், சக்தி வேலன், ஜெயப்பிரியா சரவணன், வி.ராஜேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### பல்வேறு கடன் சார்ந்த திட்டங்களின் கீழ்

# தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை எவ்வளவு?

## மக்களவையில் —காஞ்சிபுரம் க.செல்வம் கேள்வி!

புதுடெல்லி, ஆக.19-

நாடாளுமன்ற கூட்டத்தொடரில் மக்களவையில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், நிதித்துறை அமைச்சகத்திற்கு பின்வரும் கேள்விகளை எழுப்பினார்.

த மி ழ் ந ா ட் டி ன் அனைத்து மாவட்டங்களிலும் ஜன் சமர்த் போர்ட்டலை அரசு செயல்படுத்தியுள்ளதா?

அப்படியானால், இந்த இணையதளம் தொடங்கப்பட்டதிலிருந்து தமிழ்நாட்டிலிருந்து அதன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை.

பல்வேறு கடன் சார்ந்த திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் பயனாளிகளுக்கு அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.



தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொடர்புடைய தொகை.

தமிழ்நாடு பயனாளிகள் போர்டல் மூலம் அணுகும் திட்டங்களின் வகை வாரியான (விவசாயம், கல்வி, வணிகம் முதலியன) விவரங்கள்.

மாநிலத்தில் உள்ள கிராமப்புற மற்றும் பின்தங்கிய மக்களிடையே டிஜிட்டல் விழிப்புணர்வு மற்றும் போர்டலின் அணுகலை மேம்படுத்த அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

த மி ழ் ந ா ட் டி ன் அனைத்து மாவட்டங்கள் உட்பட நாடு முழுவதிலு மிருந்து ஜன் சமர்த் போர்ட்டலை அணுகலாம். 07.08.2025 நிலவரப்படி, தமிழ்நாட்டிலிருந்து ஜன் சமர்த் போர்ட்டல் மூலம் மொத்தம் 1,03,851 கடன் வி ண் ண ப ப ங் க ள் ரூ.4,186.46/- கோடிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

07.08,2025 நிலவரப்படி ஜன் சமர்த் போர்ட்டல் மூலம் பயனாளிகளுக்க அனுமதிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட கடன்களின் திட்டம் வாரியான எண்ணிக்கை இணைப்பு - 1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

07.08.2025 அன்று ஒவ்வொரு திட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட தொகையுடன் மாவட்ட வாரியான பயனாளிகளின் பிரிவு இணைப்பு - 2 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

07.08.2025 நிலவரப்படி தமிழ்நாட்டைச் சேர்ந்த பயனாளிகள் அணுகிய திட்டங்களின் வகை வாரியான (விவசாயம், கல்வி, வணிகம் போன்றவை) விவரங்கள் இணைப்பு-3இல் கொடுக்கப்பட்டுள்ளன.

போர்ட்டலின் டிஜிட்டல் விழிப்புணர்வு மற்றும் அணுகலை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

கிராமப்புற மற்றும் பின் தங்கிய மக்கள் எளிதாக அணுகுவதற்காக, இந்த போர்ட்டல் தமிழ் உட்பட 8 மொழிகளில் கிடைக்கிறது.

வங்கிகளின் வணிக நிறுவனங்களின் சேவைகளைப் பயன்படுத்தி, கடன் விண்ணப்பப் பயணங்களின் உதவி முறை போர்டல் மூலம் எளிதாக்கப்படுகிறது.

இணைய வசதி கொண்ட எந்தவொரு மொபைல் சாதனத்திலிருந்தும் இந்த போர்ட்டலை அணுகலாம் மற்றும் கடன் விண்ண ப் பத்தை சமர்ப்பிப்பதற்காக ஒரு பிரத்யேக மொபைல் பயன்பாடு கிடைக்கிறது.

இந்த போர்ட்டல் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI), தேசிய மின் ஆளுமை அகியவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மத்திய தரவு மூலங்களிலிருந்து தரவை தடையின்றி அங்கீகரிப்பதற்காக சர்வீஸ் லிமிடெட் (NESL) சரக்கு மற்றும் சேவை வரி (GST), மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT), உள்ளூர் அரசாங்கம் டைரக்டரி (LGD), Agri Stack போன்றவை.

வாடிக்கையாளர்களின் குறைகள் வெளிப்படையாக தீர்க்கப்படுகின்றன. மேலும் குறைகளை சரியான நேரத்தில் தீர்ப்பதற்கான வழிகள் குறித்து வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. போர்ட்டலில் உள்ள புகார்கள் பதிவு செய்யப்பட்டு. கண்காணிப்பட்டு. குறிப்பிட்ட காலகெடுவிற்குள் தீர்க்கப்படுகின்றன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க.சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு தலைவரின் திருவுருவ படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி 300 நபருக்கு அறுசுவை உணவை மாவட்ட செயலாளர், அமைச்சர் பி. கே. சேகர்பாபு ஆலோசனைப்படி பகுதி செயலாளர் சொ.வேலு எம்.சி, தொகுதி பார்வையாளர் டாக்டர். பா.நீ. யாழினி ஆகியோர் வழங்கினர்.நிகழ்ச்சி ஏற்பாட்டினை மகளிர் தொண்டரணி பகுதி அமைப்பாளர் வி. நதியா செய்திருந்தார்.உடன் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்எஸ். ராஜேஸ்வரி ரீதர் எம்.சி,வட்ட கழக செயலாளர் நா. பாலு,எம்.தில்லை குமார், மு.முரளிதரன், நாராயணன், ஜான்சி, அம்மு, அன்னம்,சாந்தி, அனிதா,ராஜேஸ்வரி, முன்னிம்மா,உஷா, சத்யவாணி,ஜமீலா, மீனா, செல்லம்மாள், சரஸ்வதி, ஜெயலட்சுமி, புஷ்பலதா, ரீட்டா, தேவிக்கலா, ஜீவிதா.BLA2 .உள்ளிட்ட அனைத்து கழகத்தினர் பங்கேற்றனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 2 வது வட்ட கழக உறுப்பினர் திருமதி பூங்கொடி உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டதை அறிந்து மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ மற்றும் வர்த்தகர் அணி மாநில துணைத்தலைவரும் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளருமான எஸ். மோகன் வழிகாட்டுதலில் மருத்துவ செலவிற்காக திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ரூபாய் 50,000 ரொக்கம் வழங்கினார். உடன் வட்ட கழக பொறுப்பாளர் டி. சேகர், மற்றும் கழக நிர்வாகிகள் எம். சந்திரகுமார், ஆர்.நவக்குமார், தழவை எஸ். ரஞ்சித், எஸ்.தாமரை, ஆர்.மதன்குமார், டி.கண்ணன், எம்.கார்த்திக், எம்.பாபு, ஜே.மாரிமுத்து, ஜே. பிரேம்குமார், எஸ்.ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின்போது

# வடமாநிலத்தவர் வசிக்கும் பகுதியில் உஷாராக இருக்க வேண்டும்!

## தி.மு.க.வினருக்கு புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா எச்சரிக்கை!

புதுச்சேரி, ஆக.19-

புதுச்சேரி மாநில திமுக தொகுதி செயலாளர்கள் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலுவலகத்தில் மாநில அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தலைமையில் நடைபெற்றது.

அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் லோகையன், ஆறுமுகம், அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், பிரபாகரன், வேலவன், அமுதா குமார், நர்கீஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் திமுக அமைப்பாளர் இரா. சிவா பேசியதாவது: -

புதுச்சேரியில் பூத் லெவல் ஏஜென்ட் பட்டியலை தேர்தல் ஆணையத்தில் முதலில் கொடுத்தது திமுக தான். ஓரணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் தமிழ்நாட்டில் இல்லம் தோறும் சென்று உறுப்பினர் சேர்க்கும் பணியை முடிக்கும் தருவாயில் இருக்கின்றனர். புதுச்சேரியில் நாம் விரைவில் தொடங்க வேண்டும். ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள ஒவ்வொரு பூத்திற்கும் ஒரு தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளை நியமிக்க வேண்டும். பூத் அளவில் நியமிக்கப்படுபவர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். கழகத் தலைவரின் செயலை பின்பற்றி இன்று அதிக அளவில் திமுக-வில் இளைஞர்கள் இணைந்துள்ளனர். ஒரு சில இளைஞர்கள் சினிமாக்கா ரர் பின்னால் செல்லலாம். ஆனால் நாடு, மொழி, குடும்பத்தை பற்றி சிந்திப்ப வர்கள் திமுக-வில் தான் இருப்பார்கள். தமிழ்நாட்டில் திமுக எவ்வளவு வேகத்தில், வளர்ச்சியில் உள்ளதோ அதே வேகத்தில் புதுச்சேரி யில் நாமும் செயல்பட வேண்டும். தமிழ்நாடு திராவிட மாடல் ஆட்சி புதுச்சேரியிலும் மலர வேண்டும் என்று மக்கள் விரும்புகின்ற னர். உடல்நலம் சரியில்லாத போதும் மாநில வளர்ச்சிக்காகவும், எதிர்கால திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்த கழகத் தலைவர் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார். தற்போது முதலீடுகளை ஈர்க்க மீண்டும் வெளிநாடு செல்ல இருக்கிறார். ஆனால் புதுச்சேரியில் மாநில மக்கள், இளைஞர்கள் வளர்ச்சி பற்றி கவலைப்படாத அரசு உள்ளது. காவல் துறை முதல்வர், உள்துறை அமைச்சர் என இரு பிரிவாக செயல்படுகிறது. சமூக அமைப்புகள் என்ற பெயரில் காவல் அதிகாரிகளையே மிரட்டி பணம் பறிக்கும் கொடூரம் அரங்கேறி உள்ளது. இதையெல்லாம் ஒழிக்க ஒருங்கிணைந்த புதுச்சேரி என்ற இலக்கை நோக்கி செல்ல வேண்டும். அதை நாம் தான் ஒருங்கிணைக்க வேண்டும். தேசிய அளவில் பாஜக வாக்காளர் பட்டியலில் முறைகேட்டில் ஈடுபட்டு வருகின்றனர். நமக்கு வாக்களிப்பவர்களை நீக்குகின்றனர். இப்படிப்பட்ட மிருகத்தன மான ஆட்சியில் நாம் உஷாராக இருக்க வேண்டும். ஆனால் திமுக-விடம் பாஜக-வின் ஏமாற்று வேலை பலிக்காது. வடமாநில தொழி லாளர்கள் அதிகம் வசிக்கும் தொகுதிகளில் வாக்காளர் திருத்த பணியின்போது பூத் ஏஜெண்டுகள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொகுதி செயலாளர்கள் சக்திவேல், திராவிடமணி, சீதாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், நடராஜன், சவுரிராஜன், சக்திவேல், தியாகராஜன், சிவக்குமார், ஆறு முகம், மோகன். ரவிச்சந்திரன், ராஜாராமன், இளஞ்செழியபாண்டியன், ராதாகிருஷ்ணன், கலைவாணன், சத்தியவேல், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி மணிமாறன், இலக்கிய அணி மோகன்தாசு, மகளிர் அணி காயத்ரி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை சிவசங்கம், அமைப்புசாரா ஓட்டுனர் அணி மதிமாறன், விளையாட்டு மேம்பாட்டு அணி ரவிச்சந்திரன், மருத்துவர் அணி டாக்டர் ஆனந்த் ஆரோக்கியராஜ், அணித் தலைவர்கள் சண்முகசுந்தரம், கலைமாமணி எம்.எஸ். ராஜா, மதிவாணன், முகிலன், எம். எஸ். முரளி, யோகேஷ் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி மாநில அமைப்பாளர் தமிழரசன், துணை அமைப்பாளர்கள் சிவதாசன், பாலபாரதி, எழிலரசன், அனந்தராமன், அருண், சுப்ரமணியன், பிரவீன் குமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்குதல் உள்ளிட்ட 5 புதிய திட்டங்களை அறிவித்துள்ளார்கள். இந்நிலையில் மண்டலம் 5, வார்டு–57ல் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு ஏற்பாட்டில் நேற்று (18.08.2025) வால்டாக்ஸ் சாலை பகுதியில் உள்ள தண்ணீர்த் தொட்டி சாலையில் மேயர் ஆர். பிரியா, காலை உணவினை வழங்கினார். இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், ராஜபாளையம் கிராமத்தை சேர்ந்த வருண் என்பவர் கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளி. இவருக்கு அரசு உதவித்தொகை விரைவில் கிடைத்திட அரசு அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். மேலும் அவருக்கு உதவித்தொகையை முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் எஸ்.ரமேஷ், மு. பாஸ்கரன் எம்.கேசவன், எஸ்.ராமஜெயம், கே.வி.நாகராஜ், மெய்யழகன், பபரத்குமார். அஜித், சிறுவனின் பெற்றோர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.